**செய்தி வெளியீடு எண் : 493** **நாள்: 29.03.2022**

## செய்தி வெளியீடு

## ரூ.28000 கோடி மதிப்பிலான வளர்ச்சிப்பணிகள் மற்றும் மானியக் கோரிக்கை தொடர்பான மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரிய கருப்பன் அவர்களின் தலைமையிலான ஆய்வுக் கூட்டம்.

ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மானியக் கோரிக்கை தொடர்பாக மாநில அளவிலான அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் சென்னை ஊரக வளர்ச்சி இயக்குனரகத்தில் இன்று (29.03.2022) மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச்செயலர் திருமதி பெ.அமுதா. இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. பிரவீன் பி.நாயர், இ.ஆ.ப., கூடுதல் இயக்குனர்கள், முதன்மைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு மே மாதம் பொறுப்பேற்றதிலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் திட்டப்பணிகளை விரைவுபடுத்தி திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு **மாநில நிதிக்குழு மானியமாக** 2021–22 ஆம் ஆண்டிற்கு ரூ.4304.46 கோடியினை மாநில அரசு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு விடுவித்துள்ளது.

2020–21 ஆம் ஆண்டிற்கான **ஒன்றியக்குழு மானிய நிதியாக** ரூ.3607 கோடியையும், 2021–22 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மானியமான ரூ 2666 கோடியையும் தமிழக அரசு முறையே பெற்று ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கியுள்ளது.

கடந்த 2016–17 முதல் 2019–20 வரை **பிரதம மந்திரி கிராம குடியிருப்புத் திட்டத்தின்** கீழ் 5.27 லட்சம் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 3.33 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசிடமிருந்து 929 கோடி ரூபாயும் மாநில அரசிடமிருந்து 619 கோடி ரூபாயும் இந்நிதியாண்டில் மட்டும் பெறப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் 2.90 லட்சம் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 2.32 லட்சம் வீடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கட்டப்பட்ட 238 **சமத்துவபுரங்களில்** முதல் கட்டமாக 149 சமத்துவபுரங்களில் உள்ள வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை சீரமைப்பதற்காக ரூபாய் 190 கோடி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம் – II**, 2021–22 ஆம் ஆண்டில் ரூ.1455 கோடி மதிப்பீட்டில், 2657 கிராம ஊராட்சிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில்** 2021–2022 ஆம் ஆண்டில் 33.90 கோடி வேலை நாட்கள் எய்தப்பட்டு, மொத்தம் 9000 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க **ஜல் ஜீவன் திட்டம்** செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 41.57 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு இதுவரை 30.30 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின்**கீழ் 2020–21 ஆம் ஆண்டில் 1913 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.1054 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்** கீழ் நடப்பு நிதியாண்டிற்கு ரூ. 702 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2013 பணிகள் எடுக்கப்பட்டு 28 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**நமக்கு நாமே திட்டத்தின்** கீழ் ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இந்நாளது வரை 540 பணிகள் எடுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்** கீழ் நடப்பாண்டில் 112 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள், சமையல்கூடங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் வழங்க நடவக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது..

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் அனைத்து அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளது. தற்போது நடைபெறும் திட்டங்கள் மற்றும் இத்துறை மூலம் இனி வருங்காலங்களில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் அனைத்தையும் விரைவாகவும், தரமாகவும் செயல்படுத்திட அனைத்து அலுவலர்களும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in